**விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5. சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2013 ஜுன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி | நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 49,000,000 தொகை 03 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | நிறுவகத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் முதலீடு செய்து நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தினதும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஜுன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தி | 2017 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் . கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது செயல்பாட்டில் உள்ள 2022-2026 கூட்டுருத் திட்டம் இதுவரை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2015 திசெம்பர் மாதத்தில் விநியோகிக் கப்பட்டிருந்த இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு பாடநெறிகள் மீளாய்வு தொடர்பாக வழிகாட்டல் கோவையின் 07 ஆவது வழிகாட்டி | நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளை திட்டமிடல், வினாப் பத்திரங்களைத் தயாரித்தல், அவற்றை மேம்படுத்தல், சரி பிழை பார்த்தல், தரப்படுத்தல், மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பாக பின்பற்றப்படும் குறிப்படப்பட்ட நடைமுறைகள் தரம், மாணவர் செயற்பாடுகளின் மதிப்பீட்டு செயற்பாட்டின் தரத்தையும் நியமத்தையும் பராமரித்துச் செல்வதற்காக வெளிவாரி விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பினை பெற்று இரண்டாவது தடவை விடைப்பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்கு முறையான நடைமுறையொன்றை தயாரித்து நிர்வாக சபை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | இந்த நடைமுறையை பல்கலைக்கழகத்தினுள் செயற்படுத்துவதற்காக பட்டப்பின் படிப்பு நிறுவனப் பணிப்பாளர்களுடன் கூடிய குழுவொன்று மூலம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | உரிய வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 55,990,259 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 63,559,843 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,569,584 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக உள்ளக உழைப்பு ரூபா 14,359,193 ஆல் குறைவடைந்தமை மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 547,962 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறுவகத்திற்குச் சொந்தமாக ரூபா 444,427,072 மொத்த பெறுமதியான நிலையான வைப்புக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 692,975,053 வரை ரூபா 248,548,981 ஆல் அதாவது 55 சதவீதம் அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொண்ட மொத்த மானியம் ரூபா 45,659,896 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு வரை அது ரூபா 68,307,000 வரை ரூபா | 2021 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 138 மில்லியனான செயல்பாட்டுச் செலவினத்தில், ரூபா 73 மில்லியன் மற்றும் மூலதனச் செலவுகளில் 75 சதவீதம் நிறுவக வருமானத்தினால் ஈடு செய்யப்பட்டதாகவும். திறைசேரி மானியங்கள் நிறுவனத் தேவைகளைக் கண்டறிந்து, அதற்காக மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டது. | அரசின் செலவினப் பொறுப்பினை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

22,647,104 ஆல் அதாவது 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் நிறுவகத்திற்குச் சொந்தமாக நிலையான சொத்துக்களின் அளவு கடந்த 05 ஆண்டுகளில் ரூபா 248 மில்லியனால் அதிகரித்திருக்கையில் திறைசேரி யிடமிருந்து பெற்றுக்கொண்ட அரச மானியத்தின் அளவும் ரூபா 22 மில்லியனால் அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 21,000,000 ஒப்பந்த பெறுமதியான கணக்கீட்டு மென்பொருள் முறைமை யொன்றை நிறுவுவதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 1,050,000 தொகை முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வேலைகளைப பூர்த்தி செய்யப்பட வேண்டுமென உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து 03 வருடங்களுக்கு மேல் காலம் கடந்திருந்த போதும் கணனி முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கணனி முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதியில் குறித்த சேவையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| ாக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முறையான இடமாற்ற கொள்கையொன்றின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படாமையால் 31 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகள் முதல் 39 ஆண்டுகள் வரையான காலப்பகுதியல் ஒரே இடத்தில் சேவையாற்றி வந்தனர். | முகாமைத்துவத்தின் தற்றுனவின் பேரில் இது தொடர்பாக கலந்துரையாடி எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு உள்ளதாக | உத்தியோகத்தர்களுக்காக முறையான இடமாற்ற கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் வேண்டும். |